பன்னல பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

பன்னல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் பன்னல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 67,865,702 ஆன வைப்பு மீதி ரூபா 53,964,109 ஆக ரூபா 13,901,593 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும்.	பெறுமதிகளை இனங்கண்டு சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி ரூபா 16,574,228 ஆக இருந்த போதிலும் அது ரூபா 13,315,865 ஆக ரூபா 3,258,363 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் வாகனம் மற்றும் வண்டியின் பெறுமதி ரூபா 94,630,000 ஆக இருந்த போதும் அது ரூபா 101,082,500 ஆக ரூபா 6,452,500 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	சபைக்குரிய 04 உப அலுவலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வைப்பு மீதியான ரூபா 4,841,049 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	2025 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,172,794 ஆன தளபாட உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாது இருந்துடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத மருந்து இருப்பு ரூபா 322,764 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,286,255 நிலையான வைப்பு வட்டி	2025 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி	வருமானங்களை சரியாக இனங்கண்டு

வருமானமாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 02 சொத்து விடயங்களின் பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 223,214,271 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 390,563,490 ஆனமையால் அந்த மீதிகளுக்கு இடையே ரூபா 167,349,219 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும்.	பதிவேடுகளை சரி செய்து அதன் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 04 சொத்து விடயங்கள் மற்றும் 02 வருமான விடயங்களின் ஒன்றிணைந்த பி.ச 07 கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 375,799,701 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 740,027,284 ஆனமையால் அந்த மீதிகளுக்கு இடையே ரூபா 364,227,583 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும்.	அறிக்கைகள் நாளது வரையாகப் பேணிச் சென்று அதன் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 08 செலவின விடயங்களின் ஒன்றிணைந்த செலவினப் பொழிப்பின் பிரகாரம் மீதி ரூபா 253,503,437 மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 332,952,802 ஆனமையால் அந்த மீதிகளுக்கு இடையே ரூபா 79,449,365 வேறுபாடு காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டுக்கு உரியதாக செலுத்தப்பட்டிருந்த போதும் 2025 ஆம் ஆண்டின் கடன் கொடுத்தோரின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது.	சரியான பெறுமதி இனங்காணப்படல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பெறுமதி ரூபா 14,894,050 ஆன 03 சொத்து விடயங்களுக்கான பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் காணப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சகல சொத்துக்கள் தொடர்பாகவும் பட்டோலைகள் நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			
(i)	134 ஆம் பிரிவு	உள்ளூராட்சி நிறுவனங்களுக்காகக் கூடிய	அபிவிருத்தி செய்யப்பட்ட	அபிவிருத்தி கிராமப் செய்யப்பட்ட

		ஆதனவரி அளவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பிரதேசங்களை இனங்கண்டு எதிர்காலத்தில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கிராமப் பிரதேசங்களை இனங்கண்டு சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	143 ஆம் பிரிவு	சபை ஆதனவரி அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய நிர்மாணங்களுக்காக தற்காலிக மதிப்பீடு மேற்கொண்டு ஆதனவரி அறவிட வேண்டும் எனக் காண்பிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சபை ஆதனவரி அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய நிர்மாணங்களுக்காக தற்காலிக மதிப்பீடு மேற்கொண்டு ஆதனவரி அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 38(2) ஆம் பிரிவு	நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணிச் செல்லப்படுகின்றமைக்கும் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை வினைத்திறனாக மேற்கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொண்டு அது தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிறைவேற்ற வேண்டிய எழுத்து மூல மீளாய்வு ஒன்றின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	நிதிக் கட்டுப் பாட்டிற்காக ஆக்க பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றுக்காக தேவையான நடவடிக்கைகள் நிறுவனத்தில் எடுக்கப்படுவதாகவும், எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளகக் கட்டுப்பாடை கால ரீதியில் மீளாய்வுக்கு உட்படுத்தி சபையின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்துதல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 371	உரிய பணிகள் நிறைவு பெற்ற உடன் முற்பணம் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 1988 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,716,599 தீர்த்து	இந்தத் தொகையில் ரூபா 1,467,376 தொகை தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் மிகுதித் தொகையான	உரிய பணிகள் நிறைவு பெற்றவுடன் முற்பணம் தீர்த்து வைக்கப்படல் வேண்டும்.

		வைக்கப்படாத முற்பண மீதி காணப்பட்டது.	ரூபா 249,223 தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ii)	நிதிப்பிரமாணம் 571(2)	பெறுமதி ரூபா 42,963,506 ஆன காலாவதியான 1,194 வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	காலாவதியான வைப்புக்களில் தற்போது வரையில் ரூபா 4,509,480 வைப்பின் அளவு ஒன்று வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மிகுதி வைப்புக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காலாவதியான வைப்புக்களை விடுவிப்பதற்கும், உரித்துக் கோரப்படாத வைப்புக்களை அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 106,664,766 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 77,462,461 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
i.	ஆதன வரியும் வரியும்	16,305	14,546	13,193	3,957	15,263	11,025	8,890	2,604
ii.	வாடகை	36,044	36,313	34,062	7,369	33,841	30,527	27,927	5,118
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,732	1,100	1,100	_	1,551	1,522	1,522	_
iv.	ஏனைய வருமானம்	256,891	310,948	310,948	_	8.857	1,603	1,603	_
		----------	------------	-----------	----------	-----------	------------	----------	----------
	மொத்தம்	310,972	362,907	359,303	11,326	59,512	44,667	39,942	7,722
		=======	=======	=======	======	=======	=======	======	======

2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது ரூபா 310 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் ஆன ரூபா 7.7 மில்லியனை உள்ளடக்கி ரூபா 359 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் மதிப்பீடு தயாரிக்கும் போது சாத்தியமானதாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது சாத்தியமானதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	சரியாக வருமான மதிப்பீடைத் தயாரித்து நிதியினை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**ஆதனவரி** மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,428,153 நிலுவை ஆதனவரி மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 3,097,938 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 330,215 தொகையும் அறவிடப்படாமல் காணப்பட்டது.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 4,713,122 நிலுவை ஆதனவரித் தொகையில் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரை ரூபா 3,668,604 தொகை மீள அறவிட வேண்டியிருந்ததுடன் அது 77.84 சதவீதத்தைக் கொண்டிருந்தது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**வாடகை** மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,368,695 நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்க வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையினால் உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	உபவிதிகளை விதிப்பதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து சபையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு செயற்படுதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 86,501,678 கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 84,219,006 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய ரூபா 1,493,378 மீதியும் காணப்பட்டது.	நிலுவை வரி மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 261,779,853 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 180,200,681 மீதி ஒன்று காணப்பட்டது.	மீள செலுத்த வேண்டிய வைப்புக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பு தொடர்பாக கவனம் செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டில் அனுமதியற்ற நிர்மானங்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற 16 முறைப்பாடுகளில் 05 முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எத்தகையது என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக உரிய தரப்பினருக்கு அறிவித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.	அனுமதியற்ற நிர்மாணத்தை ஒழுங்குபடுத்தி சபையின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்தல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் பராமரிக்கப்படுகின்ற 117 மயான நிலங்களில் 71 மற்றும் சபைக்குச் சொந்தமான கெப் வண்டியின் உரித்து என்பவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	கையளித்தல் கட்டளை பெற்றுக் கொள்வதற்காக எங்களால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 11 மயான நிலங்கள் எண்ணிக்கை அளவு தொடர்பான விடயங்களைப் பரீட்சித்து உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.	சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான ஸ்கேவேட்டர் இயந்திரம் 2020 மார்ச் 19 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் பொதுச் சபையினால் ஏலத்தில் விற்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் 2025 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் இயந்திரத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விற்றுத் தீர்ப்பதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள் சொத்துக்களை விரைவாக விற்றுத் தீர்த்தல் வேண்டும்.

(இ)	அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரின் 2025 பெப்ரவரி 18 ஆந் திகதிய கடிதம் மூலம் பன்னல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த தீயணைப்பு வாகனம் சபைக்கு கையேற்கப்படாது இருந்ததுடன் கிடைக்கப் பெற்ற திகதியில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டது.	இதனைக் கையளிக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	சபைக்குச் சொந்தமான 14 வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது வருடாந்த அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதில் 06 வாகனங்களுக்காக இறுதித் தடவையாக வாகன அனுமதிப் பத்திரம் எத்திகதியில் பெறப்பட்டிருந்தது என இனங்காண்பதற்கு முடியாது இருந்ததுடன் 08 வாகனங்களுக்காக 2 – 4 வருடங்களுக்கு இடையிலான காலம் வருடாந்த அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	சகல வாகனங்களுக்காகவும் வருடாந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 செயற்திட்டம், இலக்குகள் மற்றும் மூலதன வேலைகளின் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பெறுமதி ரூபா 16,435,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 19 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டிலும் ஆரம்பிக்கப்பட வில்லை.	அதிக மழையுடனான காலநிலைமையினால் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்ய முடியாதிருந்த போதிலும் தற்போது நிறைவேற்றப்படுகின்றது.	பொது நிதியினை உச்ச அளவில் செயற்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும்

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 15 பதவிகளில் 29 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சபையின் கட்டாயமாக இருக்க வேண்டிய பதவியான வருமானப் பரிசோதகர், முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர், நூலகர் மற்றும் வேலை பரிசோதகர் போன்ற பதவிகளில் வெற்றிடங்கள் கணிசமான அளவில் காணப்பட்டது.	வருமான பதிவு பரிசோதகர், முன்பள்ளி ஆசிரியர், நூலகர் மற்றும் வேலைப் பரிசோதகர் போன்ற பதவிகளில் ஆட்சேர்த்தல் அரச சேவை ஆணைக்குழுவின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றமையால் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.	ஊழியர் வெற்றிடங்களை நிரப்பி சபையின் பணிகளை முறையான பிரகாரம் நிறைவேற்றுதல் வேண்டும்.
(ஆ)	மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 98,605 மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் இருவரிடம் இருந்து	ஒரு ஊழியரின் கடன் மீதி கோரப்படாமல் சமர்ப்பிக்கப்பட்டதுடன் சேவையை விட்டுச் சென்ற	உடன்படிக்கையின் பிரகாரம் கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ரூபா 304,434 என்பன மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் அறவிட வேண்டிக் காணப்பட்டது.	உத்தியோகத்தர் இருவரினதும் பிணையாளர்களிடம் இருந்து மாதாந்தம் சம்பளத்தில் இருந்து அறவிடப்படுகின்றது.	

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் மீளாய்வாண்டுக்குரிய நிதிக் கூற்றுக்கள் 2025 பெப்ரவரி 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் தொங்கல் கணக்கில் ரூபா 345,449,441 வேறுபாடு காணப்பட்டமை சில கொடுக்கல் வாங்கல்கள் பதியப்படாமையின் காரணமாக 2025 மே 21 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் மீள திருப்பப்பட்டதுடன் மீண்டும் திருத்தப்பட்டு 2025 யூலை 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்கின்றோம்.	சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரித்து குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 80,940,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 14 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	சகல செயற்திட்டங்களும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	பொது மக்கள் நிதியினை உச்ச செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் 08 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 01 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையும் 09 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கு இடையே 01 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான உள்ளக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைக் குறைக்கும் வகையில் பாதீடுகளுக்காக பொருத்தமான மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பாதீடு நிறுவனத்தின் முகாமைத்துவ உதவிக்கான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் தயாரிக்கப்படல் வேண்டும்.